நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்
முன்னிலை: திரு.C. தினேஷ்குமார், B.A.LL.B(Hons)., LL.M.
நீதித்துறை நடுவர் எண்.2 , திண்டுக்கல்
2026ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை
ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 355/2013
CNR.No. TNDG03-000056-2013

அரசுக்காக,
சார்பு ஆய்வாளர்,
தாடிக்கொம்பு காவல் நிலையம்
திண்டுக்கல்
குற்ற எண். 1078/2009
U/s.406,420 IPC

... குற்ற முறையிடுபவர்

/ எதிர் /

ரவி (எ) வேளாங்கன்னி (42/2012),
த/பெ. குழந்தை,
வேடபட்டி,
திண்டுக்கல். ...எதிரி

**Case – Summary**

| *Statement as per rule 106 of criminal rules of practice, 2019* | | |
|---|---|---|
| **S.No** | **Description** | **Details** |
| 1. | Serial Number | Calender Case (C.C) No. 355 of 2013 |
| 2. | Name of the Police station and crime Number | State Represented by<br>Sub Inspector of Police<br>Town North PS. Dindigul in Cr.No.1078/2009 |
| 3. | Name of the accused | Ravi @ Velanganni |
| 4. | Father's Name | Kulanthai |
| 5. | Occupation | - |
| 6. | Residence | Vedapatti, Dindigul. |
| 7. | Age | 42/2012 |

<table>
<tr><td>8.</td><td>Date of occurrence</td><td colspan="3">27.01.2003</td></tr>
<tr><td>9.</td><td>Date of complaint<br>Date of filing Charge sheet</td><td colspan="3">12.10.2009<br>25.06.2013</td></tr>
<tr><td>10.</td><td>Date of apprehension</td><td colspan="3">09.04.2012(Surrender)</td></tr>
<tr><td>11.</td><td>Date of release on bail</td><td colspan="3">09.04.2012</td></tr>
<tr><td>12.</td><td>Date of commitment</td><td colspan="3">Not applicable</td></tr>
<tr><td>13.</td><td>Date of furnishing copies of document U/s. 207 Cr.P.C.</td><td colspan="3">13.08.2013</td></tr>
<tr><td>14.</td><td>Date of questioning / Charge framing and plea of the accused</td><td colspan="3">On 14.08.2018 the accused questioned on substance of accusation U/s.406,420,506(2) IPC Accused denied as false case and pleaded not guilty and claims to be tried.</td></tr>
<tr><td rowspan="6">15</td><td rowspan="6">Date of commencements of trial -The date of examination – in chief and cross- examination of a witness</td><td>Witnesses</td><td>Examined in – Chief</td><td>Examined - in Cross</td></tr>
<tr><td>PW1</td><td>01.10.2018</td><td>-</td></tr>
<tr><td>PW2</td><td>01.10.2018</td><td>12.05.2025</td></tr>
<tr><td>PW3</td><td>19.11.2018</td><td>10.07.2023</td></tr>
<tr><td>PW4</td><td>10.06.2019</td><td>23.02.2026</td></tr>
<tr><td>PW5</td><td>20.10.2022</td><td>17.04.2023</td></tr>
<tr><td>16.</td><td>The date of examination of the accused under section 313 of the code – Closed of trial</td><td colspan="3">03.11.2022</td></tr>
<tr><td>17.</td><td>Sentence on order</td><td colspan="3">முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 406,420–ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால் எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>18.</td><td>Service of copy of Judgment or finding on accused</td><td colspan="3">No. The Judgment was uploaded on CIS portal and made available in E- Courts</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 19. | Explanation of delay | There is no inordinate in the disposal of the case |
| 20. | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கு 25.06.2013ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஆண்டுபட்டிகை வழக்கு எண்.355/2013 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தில் இறுதியான விசாரணைக்கு வந்தபொழுது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி குற்றவியல் வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் ஆஜராகியும், குற்றம் சாட்டப்பட்ட எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T. பாலச்சந்திரன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களைக் கேட்டும், ஆவணங்களை பார்வையிட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்தும் வந்து இறுதியாக இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**I. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

1. அரசு தரப்பு வழக்கு யாதெனில், இவ்வழக்கின் எதிரி கடந்த 27.01.2003ஆம் தேதி காலை 11.00 மணிக்கு திண்டுக்கல் நகராட்சி அலுவலகம் முன்பு வைத்து புகார்தாரரின் மகனுக்கு, திண்டுக்கல் நகராட்சியில் குடிநீர் ஆப்பரேட்டர் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி எதிரி புகார்தாரரிடம் ரூ. 55,000/- (ஐம்பத்தைந்தாயிரம்) வாங்கிக் கொண்டு வேலை வாங்கித் தராமலும், பணத்தைக் கொடுக்காமலும் நம்பிக்கை மோசடி செய்து ஏமாற்றிய குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 406, 420 இதச-ன் படி திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளரால் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**II.வழக்கின் நகல்கள் வழுங்குதல் மற்றும் குற்றச்சாட்டு வனைந்து குற்றச்சாட்டை குறித்து வினவுதல்:**

2. குற்ற இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் எதிரிக்கு எதிராக முகாந்திரம் இருந்ததால் இந்நீதிமன்றத்தால் மேற்படி எதிரிக்கு எதிராக இவ்வழக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்டு, நீதிமன்றத்திலிருந்து எதிரிக்கு இவ்வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பானை அனுப்பி அவர்கள் முன்னிலை ஆனவுடன் வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக கு.வி.மு.ச பிரிவு 207ன் கீழ் 11.10.2023 நாள் அன்று வழுங்கப்பட்டு போதிய அவகாசம் வழுங்கப்பட்டு, வழக்காவணங்களைப் பரிசீலனை செய்து எதிரிகள் மீதான சட்டப்பிரிவுகள் 406, 420 இதச–ன் கீழ் குற்றச்சாட்டை விளக்கிக் கூறியபோது எதிரி குற்றத்தை மறுத்ததால் எதிரிக்கு எதிராக இதச பிரிவுகள் 406, 420, இதச.ன் படி குற்றச்சாட்டு வனைந்து தமிழில் வாசித்து விளக்கிக்கூறிய போது குற்றவாளி இல்லை என மறுத்ததால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**III. அரசு தரப்பு சாட்சிகள்**

3. அரசு தரப்பில் எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க அரசு தரப்பில் மொத்தம் அ.சா.1 முதல் 5 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**IV) அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம் :**

4. இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில் எதிரி ரவி என்ற வேளாங்கன்னியைத் தெரியும் என்றும், கடந்த 15 வருடத்திற்கு முன்பு திண்டுக்கல் பேருந்து

நிலையத்தில் பேருந்துகள் உள்ளே வந்து செல்வது சம்மந்தமாக தான் வரி பணம் வசூல் செய்யும் கான்ட்ராக்டரிடம் கூலிவேலை செய்து வந்ததாகவும், அப்போது எதிரி வேளாங்கன்னி திண்டுக்கல் நகராட்சியில் வேலை பார்த்து வந்தார் என்றும், தனது மகனுக்கு நகராட்சியில் பைப் ஆபரேட்டர் வேலை வாங்கித்தருவதாகவும், அதற்கு ரூ.55,000/– செலவாகும் என்று கூறி, 2,3 நாட்களுக்குள் பணத்தை கொடுத்துவிட்டால் உடனே வேலை போட்டுவிடுவார்கள் என்று, ரூ.55,000/–த்தை திண்டுக்கல் நகராட்சி அலுவலகத்திற்கு முன்பு கடந்த 27.01.2003ம் தேதி வேளாங்கன்னியுடன் வேலை பார்க்கும் கண்ணன் என்பவரும் உடன் இருந்தபோது கொடுத்ததாகவும், அதன்பின்பு எதிரி வேளாங்கன்னி தனது மகனுக்குவேலை வாங்கித் தரவில்லை என்றும், என்னிடம் எதிரி வேளாங்கன்னி எனது மகனுக்கு வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி ஒரு ஒப்பந்த பத்திரம் எனது மகனுக்கு "வேலை வாங்கித் தருகிறேன். பணத்தைப் பெற்றுக்கொண்டேன். வேலை வாங்கித் தரவில்லை என்றால் பணத்தை திருப்பிக் கொடுக்கிறேன்" என்று எழுதிக் கொடுத்தார் என்றும், என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்பந்த பத்திரம்தான் எதிரி வேளாங்கன்னி எழுதிக் கொடுத்த ஒப்பந்தப்பத்திரம் என்றும், அது அ.சா.ஆ.1 என்றும், புகாரில் காண்பிக்கப்படும் கையொப்பம் தன்னுடையது என்றும், மேற்படி புகார் அ.சா.ஆ.2 என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

5. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் அ.சா.1ஐ எனக்குத் தெரியும் என்றும், எதிரி வேளாங்கன்னியை தனக்குத் தெரியும்

என்றும், தான் கடந்த 25 வருடங்களாக பூ வியாபாரம் செய்து வருவதாகவும், கடந்த 2003ம் வருடம் நான் பூ வியாபாரம் செய்துவிட்டு வசூல் செய்வதற்காக திண்டுக்கல் பேருந்து நிலையத்திற்கு உள்ளே உள்ள பொருள் பாதுகாப்பு வைப்பகத்திற்கு அருகில் நான் உட்கார்ந்திருந்தபோது. அ.சா.1 முருகன் அவரது மகனின் வேலைக்காக அங்கிருந்த வேளாங்கன்னி, கண்ணன் மற்றொரு நபர் இருந்தார் என்றும், அப்போது அ.சா.1 முருகன் 5000 ரூபாய் கட்டு ஒன்றும், ரூ.100/– சிறிதளவும் கொடுத்தார். மீண்டும் சாட்சி 500 ரூபாய் கட்டு ஒன்று என்று கூறினார் என்றும், லெட்சுமணன், ரவி என்ற வேளாங்கன்னி ஆகியோர்கள் இருந்தார்கள் என்றும், அ.சா.1 முருகன் வேளாங்கன்னியிடம் பணம் கொடுத்தார் என்றும், தன்னிடம் காண்பிக்கப்படும் அ.சா.ஆ.1 ஒப்பந்த பத்திரத்தில் உள்ள சாட்சி கையொப்பம் தன்னுடையது என்றும், நகராட்சிக்கு போகும்போது எழுதி கையொப்பம் வாங்கினார்கள் என்றும், தான் சாட்சி கையெழுத்து போட்டதாகவும், எதிரி வேளாங்கன்னி அ.சா.1 முருகன் மகனுக்கு வேலைவாங்கித் தரவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.3 அவரது சாட்சியத்தில் அழகர்நாயக்கன்பட்டியில் குடியிருந்து வருவதாகவும், பார்வை மகஜரில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையது என்றும், கடந்த 9 வருடத்திற்கு முன்பு நகராட்சி முன்பு போலீசார் படம் வரைந்து தன்னிடம் கையொப்பம் கேட்டார்கள் என்றும், மகஜர் அ.சா.ஆ.3 என்றும் இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. காவல் ஆய்வாளர் இவ்வழக்கின் Crl.M.P. No. 5819/2009 ன் உத்தரவினைப் பார்வையிட்டு குற்ற எண். 1078/2009 பிரிவு 406, 420 இதச ஆக வழக்கு பதிவு செய்ததாகவும், பின்னர் இந்த வழக்கில் புகாரைப் பெற்று வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 என்றும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

8. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் கடந்த 12.06.2012ம் தேதி இவ்வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரித்தபோது ஏற்கனவே மாதிரி வரைபடம், பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்திருந்ததால் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார். இத்துடன் அரசு தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

## V.எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ) பிரிவின் கீழ் வினவுதல்

9. அரசு தரப்பில் சாட்சியத்தை முடித்துக் கொண்டபின்பு எதிரிக்கு பாதகமாக அரசு தரப்பு சாட்சிகள் அளித்த சங்கதிகளை கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் கீழ் 03.11.2022 தொகுத்தளித்து வினாவியபோது அரசு தரப்பு சாட்சியங்களை "பொய் சாட்சி" என்று சாட்சியங்களை மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் உண்டு என கூறினார்.

10. ஆனால் எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை, சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. அத்துடன் எதிரி தரப்பு சாட்சி விசாரணை முடிவுற்றது.

## VI. வாதுரைகள்

### 1. அரசு தரப்பில்

11. கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிக்கு எதிரான வழக்கு தகுந்த சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் சான்றாவணங்களை வைத்துப் பார்க்கும்போது, எதிரி புகார்தாரரின் மகனுக்கு அரசு வேலை வாங்கித் தருவதாகக் கூறி பணத்தைப் பெற்றுக் கொண்டு, புகார்தாரரை மோசடி செய்து ஏமாற்றியதாக அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கின் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டும், எதிரிக்கு தண்டனை வழங்க வேண்டுமென்று வாதிட்டார்.

### 2. எதிரிகள் தரப்பில்

12. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடும் போது எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் எதுவும் நிரூபிக்கப்படவில்லை. இவ்வழக்கில் எதிரிக்கு எதிராக எந்த சாட்சியமும் இல்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், எதிரி புகார்தாரரிடம் பணம் பெறவில்லை என்றும், அதற்கான சாட்சியங்கள் நிரூபிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் இவ்வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுவிக்கலாம் என்று வாதிட்டார்.

13. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில் எதிரிக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டுக்கள் நியாயமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**VII. தீர்வு:**

14. அரசு தரப்பு வழக்கின்படி,இவ்வழக்கின் எதிரி கடந்த 27.01.2003ஆம் தேதி காலை 11.00 மணிக்கு திண்டுக்கல் நகராட்சி அலுவலகம் முன்பு வைத்து புகார்தாரரின் மகனுக்கு, திண்டுக்கல் நகராட்சியில் குடிநீர் ஆப்பரேட்டர் வேலை வாங்கித் தருவதாகச் சொல்லி எதிரி புகார்தாரரிடம் ரூ. 55,000/— (ஐம்பத்தைந்தாயிரம்) வாங்கிக் கொண்டு வேலை வாங்கித் தராமலும், பணத்தைக் கொடுக்காமலும் நம்பிக்கை மோசடி செய்து ஏமாற்றிய குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 406, 420 இதச—ன் கீழ் குற்றம் சாட்டியுள்ளது.

15. அரசு தரப்பிலிருந்து மேற்சொன்ன குற்றச்சாட்டை நிரூபிப்பதற்காக சாட்சியங்களை பரிசீலனை செய்யும் முன்பாக இதச பிரிவு 406 ன் அகக்கூறுகளை பார்க்க வேண்டி உள்ளது.

i. ஒருவர் தங்களிடம் நம்பி ஒரு பொருள் அல்லது ஏதேனும் ஒன்றை ஒப்படைத்து சென்றால் அந்த பொருளின் பாதுகாவலர் மிகவும் பாதுகாப்பாக பார்த்துக் கொள்ள வேண்டும்.

ii. அந்த பொருளின் பாதுகாவலர் தன் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்துவது அல்லது விற்பது போன்ற செயலில் ஈடுபட்டு நம்பிக்கை

துரோகம் செய்தால் இதச 406 சட்டத்தின் கீழ் குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்தார் என்று கருதப்படும்.

16. மேலும், அரசு தரப்பு வழக்கானது, எதிரி இவ்வழக்கின் புகார்தாரரின் மகனுக்கு வேலை வாங்கித் தருவதாகக் கூறி ரூ.55,000/த்தைப் பெற்று வேலை வாங்கி தராமலும், வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்காமல் மோசடி செய்து ஏமாற்றினார் என்று அரசு தரப்பு இதச பிரிவு 420ன் கீழ் எதிரி மீது குற்றம் சாட்டியுள்ளது.

17. **"A.M. Mohan Vs State represented by SHO and another"** (2024) 3 S.C.R. 722 என்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற முன் தீர்ப்பு படி Para –11ல் இதச பிரிவு 420–ஐ நிரூபிக்க வேண்டும் என்றால் கீழ்க்கண்ட கூறுகள் நிரூபிக்கப்படவேண்டும்.

i. There should be fraudulent or dishonest inducement of a person by deceiving him:
ii. The Person so induced should be intentionally induced to deliver any propety to any person or to consent that any person shall retain any property, or
iii. The person so induced should be intentionally induced to do or to omit to do anything which he would not do or omit if he were not so deceived; and
iv. In cases covered by 16.1.2. above, the act or omission should be one which caused or is likely to cause damage or harm to the person induced in body, mind, reputation or property.
v. A fraudulent or dishoneset inducement is an essential ingredient of the offence. A person who dishonestly induces another person to deliver any property is liable for the offence of cheating.

24. அதாவது ஒருவரை ஏமாற்றி அதன் மூலம் நேர்மையின்றி அவரைத்தூண்டி, ஒரு சொத்தை பிறருக்கு கொடுக்கும்படி செய்தாலும், அல்லது அந்த சொத்தை தானே வைத்திருந்தாலும், அல்லது அந்த தூண்டுதலின்பேரில் அவர், ஒருவர் செய்யவேண்டிய செயலை செய்யாமல் இருந்தாலோ, அல்லது செய்யக்கூடாத செயலை செய்து அந்த தூண்டுதலுக்குட்பட்ட நபரை உடலுக்கோ, சொத்துக்கோ அல்லது மனதிற்கோ, நன்மதிப்புக்கோ தீங்குவிளைவிக்கக்கூடிய ஒரு செயலாக இருந்தால் அது இதச பிரிவு 420ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமாகும்.

18. மேற்சொன்ன குற்றச்சாட்டின் அகக்கூறுகளின் படி எதிரியின் மீதான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு நிரூபித்துள்ளதா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் அ.சா.ஆ.2 ஆன புகாரைப் பரிசீலனை செய்ததில் அதில் எதிரி முறையீடுதாரருக்கு அறிமுகம் ஆகி இருந்ததாலும் அவர் திண்டுக்கல் நகராட்சி அலுவலகத்தில் பணியில் இருந்ததால் புகார்தாரரின் மகனுக்கு நகராட்சியில் வேலை வாங்கி தருவதாக எதிரியின் பொய்யான தூண்டுரையை நம்பி ரூ.55,000/– எதிரியிடம் கண்ணன் என்ற நபர் முன்னிலையில் கொடுத்தார் என்றும் அவ்வாறு பணம் பெற்றுக் கொண்டதற்காக 27.01.2003ஆம் தேதி ஒரு பத்திரத்தில் இருவரும் எழுதி கையெழுத்திட்டு கொடுத்திருக்கிறார்கள் என்றும், அதை எதிரியே எழுதியதாகவும், அதில் எதிரியும் கண்ணனும் கையெழுத்திட்டு கொடுத்திருக்கிறார்கள் என்றும், வேலை ஏற்பாடு செய்து வேலை கிடைக்காவிட்டால் பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாகவும் எழுதிக் கொடுத்துள்ளார் என்றும், ஆனால், சொன்னபடி முறையீடுதாரரின் மகனுக்கு வேலை வாங்கி தரவில்லை என்பதால் 2008 ஆம் ஆண்டு

பல்வேறு புகார்களை அனுப்பியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளது. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.4 ஆன முதல் தகவல் அறிக்கையைப் பரிசீலனை செய்யும் போதும் மேற்சொன்ன சங்கதிகள் இடம் பெற்றுள்ளன.

19. ஆகவே, மேற்சொன்னவாறு எதிரியின் பொய்யான தூண்டுதலின் அடிப்படையில் புகார்தாரரை எதிரி நம்பிக்கை மோசடி செய்தாரா என்று பார்க்கும்போது, இவ்வழக்கில் புகார்தாரர் தனது முதல் விசாரணையில் "நான் உடனே கடன் வாங்கி ரூ.55,000/- திண்டுக்கல் நகராட்சி அலுவலகத்திற்கு முன்பு 27.01.2003 ஆம் தேதி வேளாங்கண்ணியுடன் வேலை பார்க்கும் கண்ணன் என்பவரும் உடன் இருந்தபோது கொடுத்தேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அவர் இறப்பின் காரணமாக அவரை எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை. ஆனால், இவ்வழக்கில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட கண்ணுற்ற சாட்சி தனது முதல் விசாரணையில், "நான் பூ வியாபாரம் செய்து விட்டு வசூல் செய்வதற்காக திண்டுக்கல் பேருந்து நிலையத்திற்கு உள்ளே உள்ள பொருள் பாதுகாப்பு வைப்பதற்கு அருகில் நான் உட்கார்ந்து இருந்தபோது, அ.சா.1 முருகன் அவரது மகனின் வேலைக்காக அங்கிருந்த வேளாங்கண்ணி, கண்ணன் மற்றொரு நபர் இருந்தார். அப்போது அ.சா.1 முருகன் 5000 ரூபாய் கட்டு ஒன்று, 100 ரூபாய் சிறிதளவும் கொடுத்தார். மீண்டும் சாட்சி 500 ரூபாய் கட்டு ஒன்று என்று கூறினார். லட்சுமணன், ரவி என்ற வேளாங்கண்ணி ஆகியோர்கள் இருந்தார்கள். அ.சா.1 முருகன் வேளாங்கண்ணியிடம் பணம் கொடுத்தார்" என்று பல்வேறு நபர்கள் உடன் இருந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில் "நான் முதல்

விசாரணையில் சொன்னது போல், பேருந்து நிலையத்தில் தான் கொடுக்கல் வாங்கல் நடந்ததாக போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் என்றும், அந்த பத்திரத்தில் யார் யார் சாட்சியாக கையொப்பமிட்டார்கள் என்றால் 22 வருட காலமானதால் எனக்கு ஞாபகம் இல்லை என்றும் சாட்சியமளித்துள்ள போது, யார் யார் புகார்தாரரிடம் பணம் கொடுக்கும்போது இருந்தார்கள் என்று உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், மேற்படி பத்திரத்தில் சாட்சியாக கையொப்பமிட்ட நபர்களையும் சாட்சியாக சேர்த்து இவ்வழக்கில் விசாரிக்கவில்லை.

20. இருந்தபோதிலும், தனது முதல் விசாரணையில் திண்டுக்கல் பேருந்து நிலையத்திற்கு அருகில் பணம் கொடுத்ததாகவும், அவ்வாறு கொடுக்கும்போது கண்ணன் மற்றொரு நபர் லட்சுமணன் ஆகியோர்கள் உடன் இருந்தார்கள் என்று முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார். ஆனால், அவ்வாறு மேற்சொன்ன நபர்கள் உடன் இருந்தார்கள் என்று அ.சா.1 தனது புகாரிலோ அல்லது நீதிமன்ற சாட்சியத்திலோ சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், இவ்வழக்கில் பட்டியல் சாட்சி லட்சுமணனை அரசு தரப்பில் இருந்து மேற்படி சாட்சியை காணவில்லை என்று விளக்களிக்கப்பட்டுள்ளார். ஆகவே, புகார்தாரர் பணம் கொடுத்தார் என்பதற்கு கண்ணூற்ற சாட்சியோ அல்லது உடன் இருந்த நபர்களையோ விசாரித்து உறுதியூட்டும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை. அதுவும் அ.சா.1 இறந்துவிட்டதால் முறையீடுதாரர் எதிரிக்கு பணம் கொடுத்தார் என்பதை அரசு தரப்பில் உறுதியூட்டும் வகையில் வேறு கண்ணுற்ற சாட்சிகளை வைத்து நிரூபிக்கவில்லை. மேலும், இவ்வழக்கில் புகார்தாரர்

புகாரில் குறிப்பிட்டுள்ளது போல் எதிரி பணம் வாங்கியதற்காக அ.சா.ஆ.1 ஆன பத்திரத்தை பரிசீலனை செய்யும் போது, அதில் புகார்தாரர் எதிரிக்கு பணம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளது. ஆனால், மேற்சொன்னவாறு அந்த பத்திரத்தில் சாட்சியாக கையொப்பமிட்ட வேறு நபர்களை இவ்வழக்கில் சாட்சியாக சேர்த்து விசாரிக்கவில்லை. இருந்தபோதிலும் சட்டத்திற்கு முரணான ஒரு ஒப்பந்தத்தை ஏற்படுத்தியது செல்லத்தக்கது அல்ல என்றும், அதுவும் அரசாங்க வேலை சட்டப்படிதான் கிடைக்கும் என்று தெரிந்தே அரசாங்க வேலை வாங்கிதருவார் என்ற நம்பிக்கையுடன் புகார்தாரர் பணம் கொடுத்தார் என்பதை நம்பிக்கை மோசடி என்று கூற இயலாது. மேலும் 2003 ஆம் ஆண்டு மேற்சொன்னவாறு சம்பவம் நடந்தபோது 2008 ஆம் ஆண்டுதான் முறையீடுதாரர் புகார் அளித்துள்ளார்.

21. மேலும், இவ்வழக்கில் அ.சா.ஆ.2 ஆன தனி புகாரை பரிசீலனை செய்யும் போது அதில் முறையீடுதாரர் தரப்பு சாட்சிகளாக சிவகுமார், முகுந்தன் என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால், மேற்படி நபர்களுக்கு முறையீடுதாரர் எதிரிக்கு பணம் கொடுத்த விஷயம் தெரியும் என்றோ அல்லது அவர்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்றோ தனது புகாரிலோ நீதிமன்ற சாட்சியத்திலோ சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், அவ்வாறு மேற்சொன்ன நபர்கள் முறையீடுதாரர் தரப்பு சாட்சிகளாக இருக்கும் பட்சத்தில் அரசு தரப்பில் பட்டியல் சாட்சிகளாக மேற்சொன்ன நபர்கள் யாரும் இடம் பெறவில்லை.

22. மேலும், இந்நீதிமன்றம் எதற்காக புகார்தாரர் எதிரியிடம் பணம் கொடுத்தார் என்றும், எவ்வாறு அந்த நம்பிக்கை ஏற்பட்டது என்றும்

பரிசீலனை செய்ய வேண்டும். இவ்வழக்கில் எதிரியானவர் புகார்தாரரின் மகனுக்கு வேலை வாங்கி தருவதாக கூறி அந்த நம்பிக்கையை புகார்தாரரிடம் ஏற்படுத்தினார். ஆனால், அந்த செயலானது சட்டத்திற்கு புறம்பானதாகும். ஆகவே, புகார்தாரர் சட்டத்துக்கு புறம்பான செயலை செய்ய முடியாது என்று தெரிந்தும் அதுவும் அரசாங்க வேலை சட்டப்படியே கிடைக்கப்பெறும் என்று தெரிந்தும் எதிரி கொடுத்த நம்பிக்கையின் அடிப்படையில் புகார்தாரர் மகனுக்கு வேலை வாங்கித் தருவார் என்ற நம்பிக்கையில் பணம் கொடுத்திருக்கிறார். ஆகவே, இந்த நம்பிக்கை எதிரியின் தூண்டுதலினால் ஏற்பட்டு புகார்தாரர் ஏமாற்றப்பட்டுள்ளார் என்று கருத இயலாது.

24. ஆகவே, தனது மகனுக்கு வேலை வாங்கி தருவதாக கூறி ரூ.55,000/–த்தைப் பெற்று வேலை வாங்கித் தராமலும் வாங்கிய பணத்தை திருப்பிக் கொடுக்காமல் எதிரி மோசடி செய்து ஏமாற்றினார் என்று எதிரிக்கு எதிராக சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

25. முடிவாக, எதிரி மீதான இதச பிரிவுகள் 406,420–ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்படாததால் எதிரியை குற்றவாளி இல்லை என முடிவு செய்து, குவிமுச பிரிவு 248(1)ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

26. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. சொத்துக்கள் பற்றிய உத்தரவு ஏதுமில்லை.

இந்த தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 23-ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

DINESH KUMAR C Digitally signed by DINESH KUMAR C Date: 2026.03.23 16:33:41 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**<u>I. அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| Sl. No. | Examined as | Name of Witness | Date of examination | Exhibits Marked |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.1 | முருகன்<br>த/பெ. மாசாணம் | 01.10.2018 | அ.சா.ஆ.1<br>அ.சா.ஆ.2 |
| 2. | அ.சா.2 | சரஸ்வரி<br>க/பெ. அம்பலமுத்து | 01.10.2018 | - |
| 3. | அ.சா.3 | மணி<br>த/பெ. சுப்பாநாயுடு | 19.11.2018 | அ.சா.ஆ.3 |
| 4. | அ.சா.4 | சுரேஷ்<br>காவல் ஆய்வாளர் | 10.06.2019 | அ.சா.ஆ.4,<br>அ.சா.ஆ.5 |
| 5. | அ.சா.5 | நசீர்பாட்சா<br>சார்பு ஆய்வாளர் (ஓய்வு) | 20.10.2022 | - |

**<u>II. அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :**

| Sl. No. | Exhibits | Marked through | Date of Document | Description of document |
|---|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | அ.சா.1 | 16.12.15 | ஒப்பந்த பத்திரம் |
| 2. | அ.சா.ஆ.2 | அ.சா.1 | 06.07.14 | புகார் |
| 3. | அ.சா.ஆ.3 | அ.சா.1 | 04.03.15 | பார்வை மகஜர் |
| 4. | அ.சா.ஆ.4 | அ.சா.5 | 16.12.15 | முதல் தகவல் அறிக்கை |
| 5. | அ.சா.ஆ.5 | அ.சா.6 | 16.12.15 | மாதிரி வரைபடம் |

**III. <u>அரசு தரப்பு சான்றுப் பொருள்கள்</u>** – இல்லை

**IV. <u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>** – இல்லை

**V. <u>எதிரி தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்றுப் பொருள்கள்</u>** – இல்லை

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.03.23 16:33:49 +0530

நீதித்துறை நடுவர் எண்.2
திண்டுக்கல்.

**<u>குறிப்பு:</u>**

1. வழக்கின் முடிவு எதிரிக்கும் / காவல் துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
2. வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. எந்த சாட்சிகளும் 3 முறைக்கு மேல் நிறுத்திவைக்கப்படவில்லை.